முருகப்பெருமான் துணை

**மகான் சங்கிலிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.06.2023, செவ்வாய்கிழமை

1. தவசியே தன்னலம் கருதா
   தனிப் பெருங்கருணை வடிவாக
   அவனிகாக்க அவதாரம் எடுத்த
   அண்ணலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் சோபகிருது விடைதிங்கள்
   வரங்களாக முப்பான்திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 30 ம் நாள், 13.06.2023, செவ்வாய்கிழமை)
   வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை சங்கிலிச்சித்தர் யானும்
   அகிலம் பாதுகாப்புற உரைப்பேன்
   வாசிவென்ற ஞானிகள் படை
   வரம்தந்து பிரணவக் குடிலில்
4. பிரணவக் குடிலில் அருள் வழங்கி
   பேதமிலா நல்ல சமூகத்தை
   சரவணச் சுடர்வழி இறங்கி
   சகலருக்கும் ஞானம் தந்து படைத்திட
5. படைத்திட வழிவகை செய்துவர
   பணிந்து அரங்கன் திருவடியை
   தடையின்றி பற்றித் தொடர
   தன்னலம் கருதா கொள்கை ஏற்று
6. ஏற்றுமே சேவைதனில் கலந்திட
   இணைந்து தொண்டாற்றிட
   ஆற்றல்பட அரங்கமகான் தரும்
   அனுகூல உயர் தீட்சை அடைந்து
7. அடைந்து ஞானிகளை போற்றி
   அடங்கும் மனம் மாயைவிட்டு
   இடரான சாதிஇனமத பேதம்
   எல்லாம் கடந்து யாவரும் சமம் என

8. சமமென சமத்துவநிலை கூடி
சரணாகதி குருவழி பெருகி
நேமமுடன் தான் என்ற கர்வம்
நிலைகுலைந்து விலகி ஓடிட
9. ஓடிட தயவே வடிவான
ஓங்காரம் நிறைந்த வண்ணம்
நாடிட மனத் தூய்மை கண்டு
ஞானிகளை தன்னுள் காணும்
10. காணும் மகா சூட்சுமம் விளங்கி
கலியெனும் அரக்கன் அஞ்சிட
ஞானவானாய் சிறந்து விளங்கி
ஞானிகள் படை எங்கும் பரவ
11. பரவவே ஞானயுகம் படைப்பர்
பண்பான தலைமை அமைத்து
சரவணப் பெருமான் வெளிப்பட
சத்திய யுகமாக மாற்றம் தருவர்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–